(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 50.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஆகஸ்ட் 23, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

5/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மோசடிகள் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

2.

386/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான, அரிதான மற்றும் அழிவடையும் ஆபத்திலுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மரபணு பாகங்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதில் ஈடுபடுகின்ற வெளிநாட்டவர்கள் உள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து விதிக்கப்படும் தண்டப் பணத்தை செலுத்திய பின்னர் இலகுவாக இலங்கையை விட்டு வெளியேற இவர்களுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளதா என்பதையும்;

(iii) இவர்கள் அடிக்கடி இலங்கைக்கு வருகை தந்து மேற்படி விடயத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நடவடிக்கையில் ஒழுங்கமைந்த வகையில் ஈடுபட்டுள்ள நபர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான வனவிலங்கு உத்தியோகத்தர்கள் உள்ளனரா என்பதையும்;

(ii) இன்றேல் மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வழிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) இலங்கையின் காடுகளில் சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டவர் களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவ் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

422/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இலங்கைக்குத் திரும்பி மீண்டும் தொழிலுக்காக வெளிநாடு சென்ற இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கைக்குத் திரும்பியதன் பின்னர் வேலைவாய்ப்பை இழந்த மேற்படி தொழிலாளர்களுள் சிலருக்கு மீண்டும் வெளிநாடு செல்ல முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை இழந்த மேற்படி தொழிலாளர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேலைவாய்ப்புகளை நிறைவுசெய்து இலங்கைக்குத் திரும்பிய தொழிலாளர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக விசேட கருத்திட்டக் கடன் வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

435/2023

கௌரவ புத்திக பத்திரண,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறக்குமதி செய்யப்படுகின்ற மதுசாரப் பொதிகளில் காணப்படும், மெட்ராஸ் செக்கியுரிட்டி பிரின்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் வெளியிடப்படும் ஸ்டிக்கரில் உள்ளடங்கியுள்ள பாதுகாப்பு வழிமுறைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு வழிமுறைகளை உள்ளடக்குவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அவற்றில் மேற்படி பாதுகாப்பு வழிமுறைகள் அடங்கியிருப்பதாக சர்வதேச தரநிலை நிறுவனமொன்றினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதனை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) விசேட டீ.என்.ஏ அடங்கியுள்ள மை வகைகளைப் பயன்படுத்தி அச்சிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள பாதுகாப்புக் குறியீடுகளிலும் மேற்படி மைகளிலும் அடங்கியுள்ள பாதுகாப்பு வழிமுறைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறியீடுகள் அச்சிடப்படும் முறைமையிலுள்ள பாதுகாப்பு வழிமுறைகள் யாவையென்பதையும்;

(iii) விநியோகிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வழிமுறைகள் அவ்வாறு அச்சிடப்படும் குறியீடுகள் மற்றும் மைகளில் உள்ளடங்கியிருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) பெறுகைச் செயன்முறையின்றி அச்சிடப்பட்ட 1000 ஸ்டிக்கர்களை, 5.99 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு விநியோகிப்பதற்காக மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மீது, அதே விலைக்கு, டிஜிட்டல் குறியீடு ஒன்றை கொள்வனவு செய்வதை அங்கீகரித்த அடிப்படை யாதென்பதையும்;

(ii) அதற்கான அங்கீகாரத்தை வழங்கிய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதனுடன் தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

மேலும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

691/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தில் கடந்த "நல்லாட்சி" அரசாங்கக் காலத்தில் வர்த்தக மையமொன்று நிர்மாணிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இதுவரை அந்த வர்த்தக மையம் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக மையத்தை இதுவரை திறந்துவைக்காததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த வர்த்தக மையத்தை திறந்துவைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த வர்த்தக மையம் திறந்துவைக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி வர்த்தக மையத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த நிகழ்ச்சித்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

817/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாகவும்;

(ii) இலங்கைப் பொலிஸ் துறையில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கையும்;

(iii) அந்த எண்ணிக்கை, பொலிஸ் மா அதிபர் தொடக்கம் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி வரை ஒவ்வொரு பதவி வாரியாக வெவ்வெறாகவும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பதவியையும் வகிக்கின்ற பெண் பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாகவும்;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முக்கிய பிரமுகர் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களில், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பிரமுகர்களின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஏனைய பிரமுகர் தொகுதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

839/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர்களின் மிகை மற்றும் பற்றாக்குறை நிலவுகின்ற கல்வி வலயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வொரு பாடத்தின் பிரகாரம் யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

852/2023

கௌரவ காமினி வலேபொட,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரன்மினிதென்ன, மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி-சினிமா பூங்கா கடந்த அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இப்பூங்கா பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படாமையினால் தற்போது அங்குள்ள வளங்கள் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி டெலி-சினிமா பூங்காவை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பூங்காவில் படப்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதையும்;

(iii) மேற்படி பூங்காவிலுள்ள வளங்களைப் பாதுகாப்பதற்காக நடைமுறையிலுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

861/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கொவிட்-19 என சந்தேகிக்கப்பட்ட மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் பற்றிய 'தற்காலிக சிகிச்சைக்குரிய நடைமுறை வழிகாட்டல்கள்' பற்றிய வெளியீட்டை அவர் அறிவாரா;

(ii) அந்த வெளியீட்டிற்கு உள்ளடக்கம் மற்றும் விதப்புரைகள் ஆகியவற்றை வழங்கிய நிபுணர்களின் பெயர்கள்;

(iii) நிபுணத்துவ வளவாளர்களாக சேவையாற்றிய போது அவர்கள் இணைக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் பதவிகள்;

(iv) அவர்களை நியமிப்பதற்கான பொறுப்புவாய்ந்த அதிகாரி;

(v) அவர்களை தெரிவுசெய்வதற்காக பின்பற்றப்பட்ட மூலப்பிரமாணம்/அடிப்படை;

ஆகியவற்றை இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட வெளியீட்டின் 7 ஆவது பிரிவைப் பற்றி அவர் அறிவாரா;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட பிரிவில் காணப்படும் உள்ளடக்கம் மற்றும் விதப்புரைகள் ஆகியவற்றிற்கான பொறுப்புவாய்ந்த குறிப்பிட்ட நிபுணத்துவ வளவாளர்களின் பெயர்கள்;

(iii) பிரிவு 7 இல் காணப்படும் உள்ளடக்கம் மற்றும் விதப்புரைகள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட செயன்முறை, ஆவணங்கள் மற்றும் உசாத்துணைகள் ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(iv) பிரிவு 7 இல் காணப்படும் விதப்புரைகள் உள்ளூர் அல்லது சர்வதேச மருத்துவ ஒழுக்கவியல் மற்றும் மருத்துவ மானுடவியல் நிபுணர்களின் தொழில்சார் அபிப்பிராயத்திற்கு உட்படுத்தப்பட்டதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

872/2023

கௌரவ ரோஹண பண்டார,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் நகரில் “அவந்தி தேவி” எனும் பெயரில் சிறுமியர் இல்லமொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சிறுமியர் இல்லத்தில் தற்போது பராமரிக்கப்பட்டு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சிறுமியர் இல்லத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 14 ஆம் திகதிய 2336/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 16 ஆம் திகதிய 2336/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 52 மற்றும் 53 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம் தொடர்பில் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,10,11,13,14,16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— மத்தியஸ்த (விசேட வகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 சனவரி 14 ஆம் திகதிய 2314/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ(2) ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல்.21 ஆம் திகதிய 2328/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

25.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.
இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.
ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.